**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 404/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 4<br>Defense<br>Court |
| Name | திரு. பொன்ராஜ் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of March 2024.

நான் இராமகிருஷ்ணாபுரத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை பார்த்து வருகிறேன். வழக்கின் எதிரி மற்றும் அ.சா.1 யை தெரியும் பார்த்துள்ளேன். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. போலிசார் விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

14.12.2016 ஆம் தேதி 18.30 மணிக்கு சம்பவ இடமான விஜயநாராயணம் டூ காரியாண்டி செல்லும் ரோட்டில் சுப்பிரமணியன் தோட்டத்திற்கு அருகில் உள்ள அதன் சுற்றுபுறங்களை விஜயநாராயணம் காவல் உதவி ஆய்வாளர் உங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 404/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | திரு. மரியகார்னுஸ் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of March 2024.

நான் தினையூரணியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை பார்த்து வருகிறேன். வழக்கின் எதிரி மற்றும் அ.சா.1 யை தெரியும் ஊர்காரர்கள். தேதி மாதம் ஞாபகமில்லை சுமார் 6 வருடத்திற்கு முன்னர் காரியாண்டியிலிருந்து எங்கள் ஊருக்கு நான் எனது சைக்கிளில் நான் வந்து கொண்டிருந்த போது எதிரியும் அ.சா.1 ம் தள்ளுமுள்ளுவில் ஈடுபட்டு கொண்டிருந்தார்கள். அப்போது நான் ஊர்காரர் என்பதால் சைக்கிளிலில் இருந்து இறங்கி சண்டையை விலக்கிவிட்டேன். அப்போது அ.சா.1 க்கு வலது பக்க தலையில் இரத்தம் இருந்தது போல் இருந்தது. நான் அ.சா.1 யை ஊருக்கு செல்ல அறிவுறுத்தினேன் அந்த வழியாக வந்த எக்ஸல் வண்டியில் ஏற்றி அனுப்பிவிட்டேன். போலிசார் விசாரணை செய்யவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணைக்கு நேரம் கோரப்பட்டு, அனுமதி மறுக்கப்பட்டு, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.404/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | **திருமதி. சுகிர்தா** |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the $14^{th}$ day of March 2024.

நான் தினையூரணியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். வழக்கின் எதிரி ஊர்காரர் ஆவார். தேதி மாதம் ஞாபகமில்லை சுமார் 7 வருடத்திற்கு முன்னர் சுமார் மதியம் 01.15 மணியளவில் திருநெல்வேலிக்கு சென்றுவிட்டு காரியாண்டி பேருந்து நிறுத்தத்தில் இறங்கி வீட்டிற்கு வரும் போது எதிரி படிக்கல்லால் எனது கணவரின் வலது கன்னத்தில் காதோடு சேர்த்து அடித்தார். பின்னர் தகவல் தெரிந்து நான் அ.சா.1 யை ஐகிரவுண்ட்மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு அவருக்கு சிகிச்சை அளித்தார்கள்.

மேற்படி சம்பவத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் எதிரி குடித்து விட்டு எங்கள் வீட்டிற்கு வந்து எனது கணவரை அவதுறான வார்த்தையில் பேசி திட்டியுள்ளார் அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் அளித்தோம் யார் புகார் அளித்தோம் என்று தற்போது ஞாபகமில்லை. அந்த முன்விரோதம் காரணமாக எதிரி எனது கணவரை அடித்தார். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணைக்கு நேரம் கோரப்பட்டு, அனுமதி மறுக்கப்பட்டு, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions
} CC.No.404/2017

Deposition Of Witness for { Prosecution PW 1 / Defense / Court

Name **திரு. சீமான்**

Husband Name / Father's Name

Village

Taluk

Religion Muslim/Christian/Hindu

Age /2024

எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of March 2024.

நான் தினையூரணியில் வசித்து வருகிறேன். வழக்கின் எதிரியை தெரியும். என்னுடைய ஊர்காரர். தேதி மாதம் ஞாபகமில்லை சுமார் 7 வருடத்திற்கு முன்பாக மதியம் 02.00 மணியளவில் நான் திருநெல்வேலிக்கு சென்றுவிட்டு காரியாண்டி பேருந்து நிறுத்தத்தில் இறங்கி வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது எதிரி பக்கத்திலிருந்து வந்தார் நான் கவனிக்கவில்லை திடீரென்று என்னை படிக்கல்லை வைத்து வலது பக்க கன்னத்தில் காதோடு சேர்த்து ஓங்கி அடித்தார். அவர் எதற்காக அடித்தார் என்று எனக்கு தெரியாது.

பின்னர் நான் எனது வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது எனது மனைவி விபரம் தெரிந்து வந்து என்னை ஐகிரவுண்ட் மருத்துமனைக்கு அழைத்து சென்றார். காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். அங்கு என்னை போலிசார் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணைக்கு நேரம் கோரப்பட்டு, அனுமதி மறுக்கப்பட்டு, எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.